# இலங்கையில் கிறிஸ்தவ மதக் குழுக்களின் கல்வி நடவடிக்கைகள்: கிழக்கு மாகாண தமிழ் பேசும் முஸ்லிம்களின் கல்வியில் ஏற்படுத்திய தாக்கம்

கலாநிதி எஸ். அனுசூயா

**அறிமுகம்:**
இலங்கையில் கல்விமுறை ஆரம்ப காலங்களில் இருந்து சிறப்பாகச் செயற்பட்டு வருகின்றது. இக்கல்வியினால் ஒருவன் அடைகின்ற பலன்கள் எண்ணற்றன. இங்கு பாரம்பரியக் கல்வி முறைகள் வெவ்வேறு மொழி பேசுபவர்களுக்கு வெவ்வேறு வகையில் அமைந்தது. ஆரம்ப காலம் முதல், இக்கல்வி முறையில், திண்ணைப் பள்ளிகள், பிரிவேனாக் கற்கை முறைகள், மக்தப், மற்றும் மதரசாக் கல்வி முறைகள் என்பன மாணவர்களுக்கு ஏட்டுக் கல்வியுடன், வாழ்க்கைக் கல்வியையும் ஊட்டி வந்தன. இதனால் மாணவர்களின் கல்வி அறிவு பரந்து விரிவடைந்தது. சோக்கிரட்டீஸ் காலத்திலிருந்து, இமாம் கஸ்ஸாலி, ரூசோ, ரவீந்திரநாத் தாகூர் ஊடாக இற்றைவரை மனித மேம்பாட்டிற்குக் கல்வியே அணையாவிளக்கு என்பது வலியுறுத்தப்பட்டு வருகின்றது. அக்கல்வியின் மையமாகப் பல சமயக் கோட்பாடுகள் வலியுறுத்தப்படும் போது, அதன் தாக்கங்கள், மிகவும் வலுப்பெறுகின்றன.

இதன் அடிப்படையில், கிழக்கிலங்கையில், கிறிஸ்தவ மதகுழுக்கள் ஆற்றியதும், ஆற்றி வருவதுமான கல்விப் பணிகள் அதிக அளவு தாக்கத்தை ஏற்படுத்தின / ஏற்படுத்துகின்றன. இதன் மூலம், இங்கு வாழ்கின்ற தமிழ், முஸ்லிம் மக்கள் குறிப்பிடத்தக்க அளவில் அதிக பயனைப் பெற்றார்கள்.

**ஆய்வின் நோக்கம்:**

- இஸ்லாமியர்கள் ஏன் இப்பாடசாலைகளை நாடிச் சென்று கற்றனர்.
- அதன் மூலம் அவர்கள் பெற்ற கல்வி எவ்வாறு பல்லினச் சமூகங்களுடன் நல்லிணக்கத்தை ஏற்படுத்தியது.
- அவர்கள் எவ்வாறான உயர்கல்வித் துறைகளில் பிரகாசித்தார்கள்.

**ஆய்வு முறையியல்:**

- நேர்காணல் மூலமான தகவல்களின் அடிப்படையில்.
- கல்லூரிக்குச் சென்று நேரடியாக அதிபர்களினதும், ஆசிரியர்களினதும் தகவல்களின் அடிப்படையில்.
- கல்லூரிச் சஞ்சிகைகள், நூல்கள், அறிக்கைகள் என்பவற்றின் மூலமும் இவ் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

இக்கட்டுரையின் முக்கிய நோக்கம், இங்கு வாழ்ந்த முஸ்லிம் மக்களின், கல்வி வளர்ச்சியில் கிறிஸ்தவ மதக் குழுக்கள் எத்தகைய தாக்கத்தை ஏற்படுத்தின என்பதாகும்.

இலங்கையில் இஸ்லாமியரின் பாரம்பரியக் கல்வி கற்கும் முறைகளாக மக்தப்புகள், மதரசாக்கள் என்பன விளங்கின. இவைகள் குர்ஆனையும், சமயக் கிரியைகளையும் சிறுவர்களுக்குக் கற்பித்தது. கி.பி. 7ஆம் நூற்றாண்டுவரை, முஸ்லிம்களின் கல்வி வளர்ச்சியில் குறிப்பாக கிழக்கு மாகாணத்தில், ஒஸ்தாதுகள், (வழிகாட்டி), சூபியாக்கள், மௌலானாக்கள், யூனானி வைத்தியர்கள், தென்னிந்திய ஆலிம்கள் லெவ்வைகள் ஆகியோர்கள் மூலமாக கல்விச் செயற்பாடுகள் எடுத்துச் செல்லப்பட்டன.

**ஒஸ்தாதுகள் மூலம் கல்வி**
"ஒஸ்தாது" என்பவர், கற்பிப்பவர், சொல்லிக் கொடுப்பவர், வழிகாட்டி எனப்பொருள்படும்.

இவர் தென்கிழக்கிலே 'ஊர்' என்ற இடத்திலே குடிபதியாகி, வாழ்ந்த அரேபியர்களுக்கு,

(அ) ஒருவன் இஸ்லாமியனாக நம்பிக்கை கொண்டிருக்க வேண்டிய ஈமானின் ஆறு காரியங்களையும், இஸ்லாத்தின் ஐந்து கடமைகளையும் சொல்லிக் கொடுத்ததோடு,

(ஆ) பெருமானாரினதும், சகாபாக்களினதும் வாழ்க்கை வழிமுறைகளைப் பற்றியும்,

(இ) அந்நிய சமூகத்தோடு தொடர்பு கொண்டு வாழும்போது பயன்படக் கூடிய விழுமியங்களையும்,

(ஈ) வாழ்க்கையில் அநாகரிகப் பிரச்சினைகளிலிருந்து, தற்காத்துக்கொள்ள உதவும் தற்காப்புச் சிலம்படி, குஸ்தி விளையாட்டு முறைகள் என்பவற்றையும் கற்றுக்கொடுத்தார்.

அப்போது இஸ்லாத்தை ஏற்க விரும்பியவர்கள், ஒஸ்தாதுமார்களிடம் மாணவர்களாகச் சேர்ந்தனர்.

இதுவே தென்கிழக்கிலங்கையில் வாழ்ந்த முஸ்லிம்களின் கல்வியின் ஆரம்பம்.

**சூபியாக்கள் மூலம் கல்வி**
உமையாக்கள் ஆட்சிக் காலத்தில் சூபித்துவம் வளர்ச்சி பெற்றது. இது டமஸ்கஸ், குறாசான் போன்ற பகுதிகளில் அறிவு ரீதியாக வளர்ச்சி பெற்றது. இங்கிருந்த சூபியாக்களில் பலர் உலகின் பல பாகங்களுக்கும் இஸ்லாத்தை எடுத்துச் சென்றனர். இவர்கள் இலங்கையின் தென்கிழக்குப் பகுதிகளுக்கு விஜயம் செய்து இறப்பும் எய்தியுள்ளனர். இவர்கள் மெய்ஞானத்தைத் தங்களிடம் விரும்பி வந்தவர்களுக்கு மட்டுமே போதித்தனர். இது கி.பி. 10, 11ஆம் நூற்றாண்டுகளில் நடைபெற்றது. இறைவன் பற்றிய மெய்ஞானத்தை குரு – சிஷ்ய கல்வி முறை மூலம் கற்றுக்கொண்டனர். இது ஓர் இடத்திலிருந்து கற்கும் முறையைத் தோற்றுவித்தது.

**மௌலானாக்கள் மூலம் கல்வி**
உமையாக்களின் ஆட்சியின்போது மர்வான் கலிபா ஆனதும், பெருமானின் குடும்பத்தவர்கள் துன்புறுத்தப்பட்டபின், இதனால் அங்கிருந்து பலர் வெளியேறினர். அவர்களுள் இலங்கைக்கும் வருகை தந்தனர். இவர்களை "மௌலானாக்கள்" என அழைத்தனர். இவர்கள் தைக்காக்களில் தங்கி சிறுவர்களுக்கும் இளைஞர்களுக்கும் குர்ஆனைச் சரியான முறையில் ஓதவும், எழுதவும் கற்றுக் கொடுத்தனர்.

**வைத்தியர்கள் மூலம் கல்வி (யூனானி)**
காதிரியா தரிக்காவைச் சேர்ந்த சூபிகள் மார்க்கப் பிரச்சாரத்திற்காக இலங்கை வந்தனர். தம்முடன் யூனானி வைத்தியர்களையும் கூட்டி வந்தனர். இப்படியாக வந்தவர்களுட் சிலர் இலங்கையின் தென்கிழக்குப் பிரதேசத்தில் நிரந்தரமாகத் தங்கி விட்டனர். உதாரணமாக தென்கிழக்கிலே ஆதிக்கம் செலுத்திய பிரபல "பாச்சாப் பரிகாரி" பரம்பரையினரைக் குறிப்பிடலாம். இவர்கள் கல்வியில் அரபுத் தமிழை வளர்த்தனர்.

**ஆலிம்கள் - லெவ்வைகளின் மூலம் கல்வி**
தென்னிந்தியாவில் இருந்து இலங்கைக்குத் தொழில் தேடி வந்தவர்களில், மார்க்கப் பக்தியுள்ள குர்ஆனை ஓதவும், எழுதவும் தெரிந்தவர்கள் தென்கிழக்கில் முஸ்லிம் கிராமங்களில் வந்து பள்ளிவாயல்களில் "கிஸ்மத்" எனும் பள்ளிச் சேவைகளைச் செய்ய அமர்த்தப்பட்டனர். இவர்கள் பிள்ளைகளுக்குக் குர்ஆன் ஓதக் கற்றுக் கொடுத்ததோடு திறமையானவர்களை இந்தியா செல்லும்போது அழைத்துச் சென்று அங்குள்ள மதரசாக்களில் (காயல்பட்டினம், கீழக்கரை) அரபு மொழியோடு, தமிழையும் திறம்படக் கற்றனர்.

பள்ளிவாசல்களில் நடைபெற்று வந்த 'மக்தப்'களைத் தவிர, வீடுகளிலும் தனிப்பட்ட 'லெவ்வை'மார்களால் குர்ஆன் மதரஸாக்கள், அல்லது 'மக்தப்கள்' நடைபெற்று வந்தன. இவை திண்ணைப் பள்ளிக்கூடங்களாக நடைபெற்றன.

**போத்துக்கேயர் வருகை:**
இச்சூழ்நிலையில், இலங்கையில் போத்துக்கேயர்களின் வருகை மிகவும் குறிப்பிடத்தக்கதாகக் காணப்பட்டது. அக்காலத்தில் கல்விப் போதனைகளும் தொடங்க ஆரம்பித்தன. அக்காலத்து கிறிஸ்தவ மிசனறிமார்களில் கர்மயோகி போல், பிரான்சிங்கன் அக்னாஸ்னியன் சபையினர், டொமினிக்கன் சபையினர், யேசு சபையினர் புனித வளரர்

சபை, கார்மேல் கன்னியர், அமலோற்பவமரிய நாயகி சபையினர் மிகவும் முக்கியமானவர்கள்.

தாம் சிறுவராயிருக்கும் போதே அமெரிக்காவிலிருந்து கிழக்கு மாகாணத்திற்கு வந்து அக்கரைப்பற்றுப் பிரதேச வனங்களில், நாடோடி வாழ்க்கை வாழ்ந்த குறவர்களோடு தம் வாழ்நாள் முழுவதையும் கழித்த பாதர் குக் மிகவும் குறிப்பிடத்தக்கவர். பாதர் குக், அம்மக்களின் குடியமர்வு, அவர்களுக்கு வீடுகளைக் கட்டிக்கொடுத்தல், விவசாயக் காணிகளைப் பெற்றுக்கொடுத்தல் போன்றவற்றிற்கு அரும் பணியாற்றியுள்ளார்.

**புவியியற் தன்மை:**
கிழக்கு மாகாணம், பொருளாதார வளம் நிறைந்தது என்பதால், இம்மாகாண மக்களைக் கல்வியின் பால் அக்கறை காட்ட வைப்பது ஒரு பகீரதப் பிரயத்தனமாக இருந்தது. அத்தேவையும், அவர்களுக்கு இருந்ததில்லை. ஆகையால், கிழக்கு மாகாணத் தமிழர்களும், முஸ்லிம்களும் பாதிரிமார்களின் பள்ளிக்கூடங்களுக்குச் செல்வதில்லை. வடமாகாண மக்களைப் போன்று அதிக அக்கறை காட்டவில்லை. இதன் காரணமாக 20ஆம் நூற்றாண்டுகளில் கிழக்கு மாகாணம், கல்வியில் பின்னடைவு ஏற்பட்டதைத் தவிர்க்க முடியாது போய் விட்டது. ஆனால், கடந்த இரு நூற்றாண்டுகளாக, இம்மாகாணத்து மாணவர்கள் கல்வித் துறையில் தீவிர அக்கறை காட்டத் தொடங்கி உள்ளனர்.

ஒவ்வொரு சமயத் தலைவர்களும் சமூக சீர்திருத்தவாதிகளும் கல்வியின் உயர் தன்மைகளையும் சிறப்புக்களையும் எடுத்துக் கூறுகின்றனர். இதனை மிகவும் துல்லியமாக சுவாமி விவேகானந்தர் கல்விக்கு வரையறை காண வந்தபோது "மனிதரிடம் மறைந்து கிடக்கும் பரிபூரணத்தை வெளிப்படுத்துவதே கல்வி" என்கின்றார்.

"ஒருமைக்கண் தான் கற்ற கல்வியொருவருக்கு எழுமையும் ஏமாப்புடைத்து" என்று திருவள்ளுவரும் கூறுகின்றார். ஆகவே, மனிதன் ஆயுள் முழுவதும் கற்றுக்கொண்டே இருக்க வேண்டும். கற்க மறுப்பவன் வாழ மறுப்பவன் என்னும் தத்துவம் பொதிந்தது.

இஸ்லாமியக் கோட்பாட்டை விளங்கும்போது, இறைநிலை, உயர்நிலை இரண்டும் ஒன்றைக் கருதுவது. "இறைவனை அடையும் வழியை வகுப்பதுவே கல்வி என்பது இந்து சமய நெறி". இஸ்லாமியக் கல்வி மரபுக்கு, மதமே கல்வியின் அடிப்படையாக விளங்குகின்றது. இஸ்லாமிய மறையின்படி ஞானம் முடிவில்லாதது.

இத்தகைய கல்வி மரபுகளைக் கொண்ட சமூகப் பின்னணியில்தான், கிறிஸ்தவர்கள் கல்விப் பணியாற்றினார்கள். கிறிஸ்தவக் கல்வி முறையும் சமயக் கல்வியை நடுநிலையாக வைத்தே உருவானது.

15ஆம், 16ஆம் நூற்றாண்டுகளின் பின் இலங்கையின் கிழக்கு மாகாணக் கல்வி வரலாற்றில் கிறிஸ்தவ மதம் பெருமளவு தாக்கம் செலுத்தியுள்ளது. கல்வி விழிப்புணர்ச்சியையும் ஏற்படுத்தியது. இருபதாம் நூற்றாண்டுகளில் கிழக்கிலங்கையில் ஏற்பட்ட இயற்கை அனர்த்தங்களினால் அதிக பாதிப்புற்ற மக்கள் தம் பிரதேசங்களிலேயே பெருமளவில் வாழ்ந்தனர். இச்சூழ்நிலை கல்வி அபிவிருத்தியையும் பாதித்தது.

வடமாகாணத்தைப் போன்று கிழக்கு மாகாணத்திற்குக் கல்வி விரைவாகப் பரவாததற்கு இங்கு பெருந்தொகையாக வாழ்ந்த முஸ்லிம் மக்கள் கல்வியில் அதிக அக்கறை கொள்ளாமையாகும். ஆனால், அவர்கள் சிறந்த வியாபாரிகளாகவோ அல்லது சிறந்த விவசாயிகளாகவோ இருந்தனர். அவர்கள் கட்டுப்பாடுகள் நிறைந்த சமய, சமூக, கலாசாரத் தன்மைகளுக்குள் வாழ்ந்ததனால், அவர்கள் மாற்றத்திற்கு உட்படவில்லை. பிற்காலங்களில் இந்து, முஸ்லிம் சமூகத்தினரின் வேண்டுகோளுக்கிணங்க, அவர்களின் கல்வி வளர்ச்சியைக் கருத்திற்கொண்டு அச்சமூகங்களிடையே பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டன.

**ஒல்லாந்தர் காலம்:**
ஒல்லாந்தர்கால கோயிற்பற்றுப் பாடசாலைகள், உள்நாட்டு ஆசிரியர்களைக் கொண்டு அடிப்படைக் கல்வியைத் தாய்மொழியிலும் வெவ்வேறு தொழில்நுட்பக் கல்விகளையும் கற்பித்தன. இக்காலத்தில் புரட்டஸ்தாந்து மதம் வேரூன்றி இருந்தது. முஸ்லிம்களின் கல்வி வளர்ச்சியிலும் பாதிப்பு ஏற்பட்டது. ஒல்லாந்தர் காலத்தில் 1687 இற்குப் பின், கண்டி அரசன் IIஆம் விமலதர்ம சூரியன், காலத்தில் கோவாவிலிருந்து வந்த யோசப் வாஸ்

அடிகளாரும், கொன்சல்வஸ் வாஸ் அடிகளாரும் இலங்கையின் கல்வி வளர்ச்சிக்குப் பாடுபட்டனர். பின்பு ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் 1815களில் இங்கிலாந்தில் புதிதாக உருவாகிய வெஸ்லியன் மெதடிஸ்திருச் சபையினர் முதலில் காலிக்கும், பின்னர் மட்டக்களப்பு யாழ்ப்பாணப் பிரதேசங்களுக்கும் வருகை தந்தனர்.

**கல்முனையில் கல்வி:**

*கிழக்கிலங்கையின் கல்முனைப் பிரதேசத்தில் புனித மரியாள் பாடசாலையும் கார்மல்* பாத்திமாக் கல்லூரியும் (1928) ஆரம்பிக்கப்பட்டன. இதனால் கல்வி விழிப்புணர்ச்சி ஏற்பட்டது. மேலும் பல பள்ளிக்கூடங்கள், சமயக் குழுக்களினால் ஆரம்பிக்கப்பட்டன. இவை அரச பாடசாலைகளை விட அதிகமாக இருந்தன. அம்பாரை கல்முனை மாவட்டங்களில் முக்கியமாக மெதடிஸ்த திருச்சபையினரே முதன்முதலில் பாடசாலைகளை அமைத்தனர். இப்பிரதேசத்தில் அதிக அக்கறை காட்டினர். கல்முனை பெண்கள் விடுதிப் பாடசாலை 1883இல் ஆரம்பிக்கப்பட்டது. இக்கல்லூரியில் முதன்முதலாக சம்மாந்துறையைச் சேர்ந்த இஸ்லாமியப் பெண்ணே சேர்ந்து கல்வி கற்றார் என்பது வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தது. இத்தகவலைக் கல்லூரி அதிபர் மூலம் அறிந்தேன். இது பின்னர் கல்முனையின் பிரதான சந்தியில் வடகிழக்கே அமைந்திருக்கும் இப்புராதன கட்டிடத்தை நாம் இன்றும் காணலாம். வண. கப்பிதியேல் லீனின் ஞாபகார்த்தமாகவே இக்கட்டிடம் அமைக்கப்பட்டது. 1901இல் செல்வி கிரேஸ் திலையம்பலத்தின் அயராத முயற்சியால் நற்பணி பல புரிந்து கல்முனை வரலாற்றில் தனது சாயலைப் பதித்தது. பின்பு 1954இல் லீஸ் பாடசாலையும், பெண்கள் விடுதிப் பாடசாலையும் ஒன்றிணைக்கப்பட்டு உவெஸ்லி உயர்தரப் பாடசாலை எனப் பெயர் பெற்றது. அதன் பின்னர் இக்கல்லூரி பல கல்விமான்களை உருவாக்கும் பணியில் வெற்றி பெற்று இன்றும் வரலாற்றில் தடம்பதித்து வருகின்றது. இப்பாடசாலையின் உயர்ச்சிக்காகத் தம்மையே தியாகம் செய்த திரு ஜோர்ச் நல்லதம்பி, செல்வி ஜி.கே. தில்லையம்பலம், திரு சாம் வில்சன், திருமதி ஆர் சின்னையா ஆகியோரின் சேவை என்றும் பாராட்டிற்குரியது.

இப்பின்னணியில் இங்குள்ள முஸ்லிம் மக்கள் கல்வி நலம் தேடி மட்டக்களப்பு மெதடிஸ் கல்லூரி போன்றவற்றிற்குச் சென்றனர். பல்வேறு கிறிஸ்தவக் கல்லூரிகள் முஸ்லிம்களின் கல்வி வளர்ச்சிக்கு கால்கோள் இட்டன. தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் வேந்தராக விளங்கிய தேசப்பற்று ஜெஸீமா இஸ்மாயில் கார்மேல் பெண்கள் பாடசாலையின் பழைய மாணவி.

கல்முனையில் அருட் சகோதரர் எஸ்.ஏ.ஐ. மத்தியூ உடனான நேர்காணலின் மூலம் (08.10.2009) பல சிறந்த தகவல்களைப் பெற முடிந்தது. இவர் பாத்திமாக் கல்லூரியிலும், உவெஸ்லிக் கல்லூரியிலும் பயின்று பல குறிப்பிடத்தக்க உயர் பதவிகளைப் பெற்ற இஸ்லாமியர்களைப் பட்டியலிட்டுக் கூறினார். இங்கு கல்வி கற்றோர் நிந்தவூர், இறக்காமம், கல்முனை, மருதமுனை, சாய்ந்தமருது, பொத்துவில், அக்கரைப்பற்று போன்ற பிரதேசங்களிலிருந்து வந்தோரேயாவர். இவர்களில் பலர் உயர் கல்வி அதிகாரிகளாகவும், அட்டாளைச்சேனை ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி அதிபர்களாகவும், ஆசிரியர்களாகவும், மருத்துவர்களாகவும், பொறியியலாளர்களாகவும் மேலும், பல இன்னோரன்ன உயர் பதவிகளை வகிப்பவர்களாகவும் காணப்பட்டனர்.

மேலும், தகவல் படிவம் மூலம் உவெஸ்லிக் கல்லூரியிலும், கார்மேல் பாத்திமாக் கல்லூரியிலும் கல்வி கற்றோர் தமது அனுபவங்களை வெளிக்கொணர்ந்தனர். இதன் மூலம், அவர்கள் பெற்ற சிறந்த பழக்கவழக்கங்கள், ஆங்கில அறிவு, அர்ப்பணிப்புத்தன்மை, சமய, இன, சகிப்புத் தன்மை உதவி செய்யும் மனப்பான்மை போன்றவற்றைப் பெறக் கூடியதாகவும் இருந்ததாகக் கூறுகின்றார்கள்.

கல்முனை உவெஸ்லியன் மிசன் ஆரம்பித்த உவெஸ்லி உயர்தரப் பாடசாலையிலும், பாத்திமா உயர்தரப் பாடசாலையிலும் கல்வி கற்ற, இஸ்லாமியர்கள் எவ்வாறு சிறப்பான வளர்ச்சி பெற்றார்கள் என்பதை ஆரம்பத்தில் நான் அறியக் கூடியதாக இருந்தது.

உவெஸ்லிக் கல்லூரி முதல்வராகக் கடமையாற்றிய V. பிரபாகரன் இக்கல்லூரியில் பயின்ற பல்வேறு இஸ்லாமியக் கல்விமான்களைப் பற்றியும், வர்த்தகர்களைப் பற்றியும் தலைசிறந்த அரசியல்வாதிகளைப் பற்றியும் அதிபர்கள், கல்வி அதிகாரிகள் வைத்தியக் கலாநிதிகள், பொறியியலாளர்கள், மற்றும் இஸ்லாமியப் பெரியார்களைப் பற்றியும் எடுத்துக் கூறினார். அவர்கள் இக்கல்லூரிக்கு ஆற்றிய சேவையைப் பற்றியும் எடுத்துக் கூறினார்.

இக்கல்லூரியில் கல்வி கற்பதற்காக முதலாவது அனுமதி வழங்கப்பட்டது செல்வி ஜெமீனா என்ற முஸ்லிம் பெண்ணொருவருக்கேயாகும்.

**கல்வியில் திறமையாக மிளிர்ந்தவர்கள்:**

**பாராளுமன்ற உறுப்பினர்கள்:**

01. கேற் முதலியார் M.S. காரியப்பர், M.P.
02. MM. முஸ்தபா, M.P.
03. MC. அஹமது, M.P.
04. MIA. மஜீத்
05. AR. மன்சூர்
06. AM. சம்சுதீன், Ex. Ambassador
07. MHM. அஷ்ரப், M.P.
08. MM. இப்றாகிம், M.P.
09. SU. எதிர் மன்னசிங்கம், M.P.
10. S. இராசமாணிக்கம், M.P.
11. S. தம்பிராசா
12. K. நவரெட்ணம், (செல்வராசா), M.P.

**பொலீஸ் மா அதிபர்**

T. ஆனந்தராஜா, IGP

**மாவட்ட அரசாங்க அதிபர்**

K. செல்வரெட்ணம்

**பொறியியலாளர்கள்**

01. NM. காரியப்பர்
02. GW. விமலதாச
03. M. அப்துல் காதர்

**சட்டத்தரணிகள்**

01. உவெஸ்லி T. கந்தையா
02. MHM. அஷ்ரப்
03. VE. செல்வராஜா
04. AM. சம்சுதீன்
05. AR. மன்சூர்

**கூட்டுறவுப் பரிசோதகர் - MIA. மஜீத்**

01. S. தம்பிராசா
02. K. சுப்பிரமணியம்
03. K. வெற்றிவேள்
04. OM. ஜெயசுந்தர

**பட்டின சபைச் செயலாளர்**

M. சாகுல் ஹமீட்

**இலிகிதர்**

01. AHA. றகீம்
02. S. ஆனந்த குமார
03. VE. நாகேந்திரன்
04. KR. குணரத்தினம்
05. A. உதுமாலெப்பை

**விதானை**
TM. தசநாயக
G. பொன்னுத்துரை

**வட்டாரக் கல்வி அதிகாரி**
M. முகம்மது அலி
KL. சின்னலெப்பை
SHL. அலியார்
KL. அபூபக்கர் லெப்பை

**தபாலதிபர்**
S. அகமட் லெப்பை
DM. அகமட் லெப்பை
H. உமறு லெப்பை
KM. யாசின்

**முஹம்மது றியாஸ்:**

- கல்முனை மாநகர சபை உறுப்பினர் ஆரம்பம் முதல் – உயர்தரம் வரை படித்தவர். விளையாட்டுத்துறையில் "Weslyian" என்ற பட்டத்தை இக்கல்லூரி இவருக்குக் கொடுத்தது.

- இவ்வாறு பல கல்விமான்களும், அறிவுடையோரும் உருவாக்கப்பட்டனர்.

- நேர்காணலில் மூலம் அவர்களின் கருத்துக்களைக் கேட்டபோது, அவர்கள் இக்கல்லூரிகளைத் தெரிவு செய்வதற்கான காரணங்களாய் அங்கு,

01. ஆங்கிலக் கல்வி பெறுவதற்கு
02. சிறந்த ஒழுக்கங்களைக் கற்றுக் கொள்ள
03. அதிக வசதிகளைப் பெற்றுக் கொள்ள
04. தரமான பாடசாலைகள் அங்கில்லாத காரணத்தால்
05. பல்லின மாணவர்கள் அங்கு கற்றதனால்
06. ஏனைய மொழிகளைக் கற்க
07. இன ஒற்றுமைத்தன்மைகள் காணப்பட்டமை
08. கல்வித் தரம் உயர்ந்ததாகக் காணப்பட்டமை
09. இங்கு கற்றவர்கள் சிறந்த பிரசைகளாகக் காணப்பட்டமை
10. அதிபரின் முற்போக்கான தலைமைத்துவமும் ஆசிரியர்களின் அர்ப்பணிப்புத் தன்மையும் கடமையுணர்வும் காணப்பட்டமை
11. கிறிஸ்தவ, இந்து சமய, கலாச்சாரத்தைப் பற்றிய விரிவான அறிவு
12. நல்லிணக்கத்திற்கான பரந்த மனப்பான்மையை வளர்க்கக் சூழல் காணப்பட்டமை போன்றவையே ஆகும்.

**முடிவுரை:**
இலங்கையின் கல்விமுறை ஆரம்ப காலங்களிலிருந்து பாரம்பரிய முறைகளாகக் காணப்பட்டன. திண்ணைப் பள்ளிகளும், பிரிவேனாக்களும் முறையாக ஏட்டுக் கல்வியையும், வாழ்க்கைக் கல்வியையும் கற்றார்கள். இஸ்லாமிய மாணவர்கள் மக்தப்களிலும், மதரசாக்களிலும் திருக்குர்ஆனை மனனம் செய்தும் ஆன்மீகக் கல்வி கற்றலிலும் ஈடுபட்டனர். போத்துக்கேயரும், ஒல்லாந்தரும், கல்வியுடன் கிறிஸ்தவ மதபோதனைகளை மேற்கொண்டவேளை மட்டக்களப்பு இஸ்லாமியர்கள் அவற்றை வெறுத்து விவசாயத்திலும், வியாபாரத்திலும் ஈடுபட்டனர். பின்பு கிறிஸ்தவ மிசனரிமார்களின் முயற்சியால் பாத்திமாக் கல்லூரி, வெஸ்லிக் கல்லூரி, கார்மேல் பெண்கள் பாடசாலை என்பன கல்முனையில் வெவ்வேறு காலகட்டங்களில் நிறுவப்பட்டது. பத்தொன்பதாம், இருபதாம் நூற்றாண்டுகளில் இஸ்லாமியர்கள் இக்கல்லூரிகளில், சேர்ந்து உயர்கல்வியை ஆங்கில மொழியில் கற்றார்கள். அத்துடன் சகோதர இனங்களுடன் சமூக நல்லிணக்கத்துடனும், புரிந்துணர்வுடனும், பண்பாகவும் பழகினர்.

உவெஸ்லி பல அறிஞர்களையும், தலைவர்களையும் உருவாக்கியது. முதன்மையானவர்கள் பெயர் கூறக்கூடிய அளவில் பல்வேறு சேவைகளில் மிளிர்ந்தனர். இவ்வாறு மிளிர்ந்தவர்களில் அநேகம்பேர் கிறிஸ்தவ மிசனரிமார்களின் கல்லூரியில் கல்வி கற்றோரேயாவர்.